# சர்வவியாபி

MISSION PRESS 1840
PONDICHERRY

SARVA VIABI

ESTD:1.3.1907
(Year-113)

03-11-2019 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | விகாரி வருடம் ஐப்பசி 24 | வருட சந்தா ₹ 150 தனிப்பிரதி ₹ 6

புத்தகம் 56 | இதழ் 42 பக்கம்-12


e-mail:missionpress48@gmail.com
e-mail:missionpress48@yahoo.com
Ph: 0413/ 2334360


ஆசிரியர்: பேரருட்திரு ஆ.அருளானந்தம்


## நம் விலங்குகளை உடைப்பவர் தூய ஆவியார்

*நம்மையும், நம்மோடு வாழ்பவர்களையும், அடிமைப் படுத்தியிருக்கின்ற விலங்குகளை, தூய ஆவியாரால் மட்டுமே தகர்க்க இயலும் என்ற விசுவாசத்தில் உறுதிப்பட வேண்டுவோம் என்கிறார் திருத்தந்தை.*

திருத்தூதர் பணிகள் நூலை நாம் வாசிக்கும்போது, தூய ஆவியார் திருஅவையின் தூதுரைப் பணிக்கு அடித் தளமாக இருக்கிறார். அவரே, தூதுரைப் பணியாளர்கள் பின்செல்ல வேண்டிய பாதையைக் காட்டி, அவர்களை வழிநடத்துகிறார் என்பதைக் காண்கிறோம். இதனை, திருத்தூதர் பவுல், துரோவா நகரை அடைந்தபோது, கண்ட காட்சியில், நாம் தெளிவாக காண்கிறோம்.அக்காட்சியில், பவுல் அடிகளாரிடம், மாசிதோனியர் ஒருவர் வந்து நின்று, "நீர் மாசிதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவி செய்யும்" என்று வேண்டினார். திருத்தூதரும், இது கடவுளிடமிருந்து வந்த அழைப்பு என்பதில் உறுதிபூண்டு, எவ்வித தயக்கமுமின்றி, தூய ஆவியாரால் வழிநடத்தப் பட்டு, மாசிதோனியாவுக்குப் புறப்பட்டார். அப்பயணத்தில் சீலாவும் பவுலுடன் இருந்தார். அவர்கள் மாசிதோனியாப் பகுதியின் முக்கிய நகரமான பிலிப்பிசென்றனர். அங்கு பவுல், ஓய்வு நாளில் இறைவேண்டல் செய்வதற்காகக் குழுமியிருந்த பெண்கள் குழுவிற்கு முதலில் போதித்தார். அப்பெண்களில் ஒருவர் லீதியா. பவுல் அடிகளார் பேசியதை ஏற்றுக்கொள்ளுமாறு இயேசு அவர் உள்ளத்தைத் திறந்தார். அவரும், அவரது கணவரும் திருமுழுக்குப் பெற்றனர். அதன் பயனாக, லீதியாவும், தன் வீட்டை கிறிஸ்துவைப் பின்செல்பவர்களுக்குத் திறந்து வைத்தார். கிறிஸ்தவ விருந்தோம்பல், விசுவாசத்தால் பிறப்பது என்பதற்கு, இது எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

பிலிப்பி நகரில், ஓர் அடிமைச் சிறுமியைக் குணப் படுத்தியதற்காக, பவுலும், சீலாவும்,சிறையில் அடைக்கப் பட்டனர். சிறையில், நள்ளிரவில் கடவுளுக்குப் புகழ்ப்பா பாடி ஆண்டவரிடம் உருக்கமாக மன்றாடினர். அச்சமயத்தில், திடீரென ஏற்பட்ட பெரிய நிலநடுக்கத்தால் அவர்களின் விலங்குகள் கழன்று வீழ்ந்தன. இந்த நிகழ்வால் அதிச்சியுற்ற சிறைக்காவலர் அவர்களிடம், நான் மீட்படைய என்ன செய்ய வேண்டுமென்று கேட்டார். அவர்களிடமிருந்து ஆண்டவரது வார்த்தையை கேட்டபின், சிறைக்காவலர் தனது குடும்பத்தினரோடு திருமுழுக்குப் பெற்றார். இந்நிகழ்வுகளில் நாம் தூய ஆவியாரின் பணிகளையும், நற்செய்தியின் கட்டுகடங்காத வல்லமையையும் பார்க் கிறோம். ஆண்டவரது வார்த்தையைக் கேட்டு, மற்றவர்க்குப் பணிவிடைசெய்த லீதியா போன்று, நம் இதயங்கள் திறக்கப்படுமாறு தூய ஆவியாரிடம் மன்றாடுவோம். நம்மையும், நம்மைச் சுற்றியிருப்பவர்களையும், அடிமைப் படுத்தியிருக்கின்ற விலங்குகளை, தூய ஆவியாரால் மட்டுமே தகர்க்க இயலும் என்ற விசுவாசத்தில் உறுதிப்பட வேண்டுவோம். இதற்கு பவுல் மற்றும், சீலாவின் முன்மாதிரி கையைப் பின்பற்றுவோம். இவ்வாறு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இப்புதன் பொது மறைக்கல்வி யுரையை நிறைவு செய்தார்.

## திருமணமாகா நிலை திருஅவையில் பாதுகாக்கப்படும்.

*அருள்பணியாளர்களும், துறவியரும் மனமுவந்து ஏற்கும் திருமணமாகா நிலையை மாற்றும் கருத்து, அமேசான் சிறப்பு ஆயர்கள் மாமன்றத்தில் ஒருபோதும் எழவில்லை - கர்தினால் பேத்ரோ பரெத்தோ.*

### திருமணமாகா நிலை, இறைவனின் கொடை

அருள்பணியாளர்களும், துறவியரும் மேற்கொள்ளும் திருமணமாகா நிலை, இறைவன் திருஅவைக்கு வழங்கி யுள்ள ஒரு கொடை என்பதையும், அக்கொடை, திருஅவை யில் தொடர்ந்து பாதுகாக்கப்படும் என்றும், கர்தினால் பரெத்தோ அவர்கள், தன் பேட்டியில் வலியுறுத்திக் கூறினார்.

அமேசான் பகுதியில் அருள்பணியாளர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால், அப்பகுதியில் குடும்ப வாழ்வில் ஈடுபட்டிருக்கும் நிரந்தர தியாக்கோன்களை அருள்பணியாளர்களாக திருப்பொழிவு செய்வது குறித்த விவாதங்களே மாமன்ற அவையில் இடம்பெற்றன என்றும், இந்தக் கருத்துக்கும், திருமணமாகா நிலையை மாற்றும் கருத்துக்கும் வேறுபாடுகள் அதிகம் உள்ளன என்றும், கர்தினால் ப்ரெத்தோ அவர்கள் விளக்கம் அளித்தார்.

### திருஅவையின் திறந்த மனப்பான்மை

இந்த மாமன்றத்தின் துவக்கத்தில், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் புனித பேதுருவின் கல்லறைக்கருகே நின்றவேளையில், அவரைச் சுற்றி, அமேசான் பகுதியின் பழங்குடியினர் தங்கள் பாரம்பரிய உடைகளுடன் நின்றது, கலாச்சாரங்களைக் குறித்து, திருஅவை கொண்டிருக்கும் திறந்த மனப்பான்மையை வெளிப்படுத்தியது என்று கர்தினால் பரெத்தோ அவர்கள் குறிப்பிட்டார். அமேசான் பகுதியில் பணியாற்றும் ஆயர்கள் மற்றும் கர்தினால்களின் சிறப்புப் பிரதிநிதியாக இந்த சிறப்பு மாமன்றத்தில் பங்கேற்ற இயேசு சபை கர்தினால் பரெத்தோ அவர்கள், அமேசான் பகுதியில் நிலவும் கலாச்சாரங்களுக்கு, திருஅவை மதிப்பு வழங்கும் அதே வேளையில், அந்த கலாச்சாரங்களைக் கொண்டுள்ள மக்களுக்கு நற்செய்தியை அறிவிப்பதும், திருஅவையின் முக்கிய பணி என்று, தன் பேட்டியில் எடுத்துரைத்தார்.

### அன்னை மரியா, திருஅவையின் வேர்

பெண்களின பங்கு பற்றிய கேள்விக்கு பதிலளித்த கர்தினால் பரெத்தோ அவர்கள், அன்னை மரியா திருஅவையின் வேராக செயலாற்றுவதுபோல், பெண்களும், திருஅவையின் வாழ்வில் மிக முக்கிய பங்கு வகிக்க வேண்டும் என்பது, அமேசான் பகுதிக்கு மட்டுமல்ல, உலகமெங்கும் உணரப்பட வேண்டும் என்று கூறினார்.

ஆசிரியர் பேனா...

# எளிமையை கடைபிடிப்போம்; ஏழையரை அன்பு செய்வோம்!

**பேராசையும் ஏழ்மையும்:** எல்லாரும் எல்லாமும் பெற்று, எப்போழுதும் இன்புற்று வாழவேண்டும் என்பது இறைவனின் விருப்பம். எத்தனை உயிர்கள் நொடிக்கு நொடி உலகில் பிறந்தாலும், அத்தனைக்கும் போதுமான தேவைகளை (உணவு, காற்று, நீர், உறைவிடம் மற்றும் பிற) கடவுள் இந்த இயற்கையில் கொட்டி வைத்திருக்கின்றார். ஆனால் இவை அனைத்தும் ஒரே ஒரு மனிதனுடைய பேராசைக்கு, யானை பசிக்கு சோலப் பொரி போலாகிவிடும். இன்று உலகில் இருக்கின்ற ஏழ்மைக்கு இதுவே காரணம்.

**இந்தியாவில் ஏழ்மை:** இந்தியாவில் இருக்கும் முதல் எட்டு செல்வந்தர்கள் உட்பட 1 % பேர் நாட்டின் 73 % செல்வத்தை வைத்திருக்கின்றனர். இவர்களே நாட்டின் பொருளாதாரத்தையும், அரசையும் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றனர். வருமைக்கோட்டுக்கு கீழ் உள்ள 21.1% பேரின் வாங்கும் திறன் 1.90 டாலர் (அ) 123.5 ரூபாய். புரூக்கிங் ஆய்வு அறிக்கைபடி இந்தியாவில் 73 மில்லியன் பேர் மிக மிக ஏழைகளாக உள்ளனர் (wikipedia, poverty in India). மலைக்கும் மடுவுக்கும் உள்ள இந்த பொருளாதார ஏற்றத் தாழ்வு பேராசையினுடைய கோரமுகத்தையும், ஏழையின் வேதனையையும் நமக்கு காட்டுகிறது. கவிஞர் வாலி இந்த அவலத்தை சுட்டிக்காட்டுகிறார். “படைத்தவன் மேல் பழியு மில்லை, பசித்தவன்மேல் பாவம் இல்லை; கிடைத்தவர்கள் பிரித்துக்கொண்டார், உழைத்தவர்கள் தெருவில் நின்றார். பலர் வாட வாட, சிலர் வாழ வாழ ஒருபோதும் தெய்வம் கொடுத்ததில்லை” (வாலி 1964, படகோட்டி திரைப்படம்).

**ஏழையரின் வேதனை:** சத்தான உணவு இல்லாததால் செத்துக்கொண்டிருக்கும் குழந்தையை மடியில் போட்டு சோகமே வடிவமாக வாடும் தாயின் தேவனை யாருக்கும் புரியாது. பசி இல்லை என்று சொல்லி குழந்தை உண்ண மறுக்கும் வகை வகையான உணவு பண்டங்களை குப்பைக் கழிவாக எடுத்து வீசும் சீமாட்டிக்கு ஏழைத் தாயின் வேதனை தெரியுமா? இன்று நம் நாட்டில் 10 லட்சம் குழந்தைகள் ஊட்டச் சத்து இன்மையால் இறந்து கொண்டிருக்கிறார்கள் எனத் தெரிந்தும் நம் மனம் நோகாதது ஏன்?

‘கால்நடையா போகிறேன்; கெஞ்சிகிட்ட கேட்கிறேன்; உழைச்சி தின்ன வயசில்லை; உசிர மாய்க்க மனசில்ல; என்னமட்டும் மறந்திட்டியே, பிச்சக்கார கடவுளே’ என்று யாசித்து பிழைக்கும் ஒரு முதியவர் தன் வேதனையை சொல்லுகிறார். இதை கேட்கும் நம் மனம் கசிந்துருக வேண்டும். ஆனால், பெற்றோரின் உழைப்பாலும் பிறரின் கொடையாலும் வறுமையற்ற வாழ்வுக்கு உயர்வு பெற்ற பலருக்கு ஏழையரின் வருத்தம் புரியாதது வியப்பானது. இப்படி இருக்க காசே கடவுள் என்று கருதிடும் கல்மனம் கொண்டோரை என்ன சொல்வது.

**வளர்ச்சியும் ஏழ்மையும்:** ஏழ்மையை கடவுள் படைக்கவில்லை; அது மனிதனின் படைப்பு. ‘உழைத்து வாழ வேண்டும், பிறர் உழைப்பில் வாழ்ந்திடாதே’ இது தத்துவம். பொருளாதார தாராள மயமாக்கல், உள்நாட்டு உற்பத்தியும், வர்த்தகமும் நிசிவுறச் செய்தது. மனித சக்திக்கு மாற்றாக இயந்திர சக்தியின் பயன்பாடு வேலை வாய்ப்பை குறைத்தது. செயற்கை அறிவுள்ள (Artificial inteligence (Robot) இயந்திரங்களை பயன்படுத்தி லாபம் ஈட்டும் பேராசை பெரும் முதலாளிகளை பிடித்துக் கொண்டுவிட்டது. அறிவும், ஆற்றலும் உள்ள மனிதனை புறக்கணித்தால் ஏழ்மை பெருகும் என்பது பற்றி அவர்களுக்கு கவலையில்லை.

**செல்வம் சாராத எளிய வாழ்வு:** மறை கட்டளைகளை கடைபிடிக்கும் இளைஞன் ஒருவன் நிலைவாழ்வை உரிமையாக்கிக் கொள்ள என்ன செய்ய வேண்டும் என்று இயேசுவிடம் கேட்கிறான். “உமக்கு இன்னும் ஒன்று குறைவாக இருக்கிறது. உமக்குள்ள யாவற்றையும் விற்று ஏழைகளுக்கு கொடு” (லூக்.18:18-22) என இயேசு அவனுக்கு வழிகாட்டினார். அருட்செல்வத்தை நாடுகிறவர்கள் பொருள் செல்வத்தின் மீது பற்று வைக்கக் கூடாது.

“யான்எனது என்னும் செறுக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்” (குறள் 346)

இல்லறத்தோருக்கும், மேலும் குறிப்பாக துறவோர்க்கும் இயேசுவின் வழிகாட்டலும் இக்குறளின் நெறியும் பொருந்தும். செல்வம் சாராத எளிய வாழ்வுக்கு இயேசுவே மாதிரியாக இருக்கின்றார்; “நரிகளுக்குப் பதுங்குக் குழிகளும், வானத்துப் பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு, மானிட மகனுக்கோ தலை சாய்க்கக்கூட இடமில்லை” (லூக்.9:58) செல்வத்தின் மீது பற்று அறுத்து, இறைவனையே நம்பி, பிறர் நலனில் அக்கறை கொள்வது எளிமையான வாழ்வுக்கு அடித்தளம். தேவைகளை பெருக்கிக் கொள்ளாமல், ஆடம்பரங்களையும் வீண்பெருமையையும் விலக்கி அகத் தூய்மையோடும் அடக்கத்தோடும் செயல்படுவது எளிமை. செல்வந்தர்கள் எளிமையாக வாழ்வதனால் ஏழைகளுக்கு உதவ முடிகிறது என்பதற்கு சில உதாரணங்களை பார்க்கலாம்.

**செல்வம் இருப்பினும் எளிமை:** வாரன் பஃபெட் (Warren Buffet) உலகின் மிகப்பெரிய செல்வந்தர் இவர் இன்றும், 1950 ல் தான் வாங்கிய சிறு வீட்டில் வாழ்ந்து வருகிறார். மிகவும் சிக்கனமானவர், எதையும் வீணாக்காதவர். தான் தர்மம் செய்வதோடு, தர்மம் செய்வதை ஊக்குவிப்பவர். இன்போசிஸ் (Infosys) நிறுவனர் நாராயணமூர்த்தி தினம் தன் தொழிலாளர்களோடு பேருந்தில் பயணிப்பவர். தன்னால் சாலை போக்குவரத்துக்கு தடங்கல் நேரக்கூடாது என்பதற்காக கர்நாடக அரசு கொடுத்த உயர் அடுக்கு பாதுகாப்பு தேவை இல்லை என்று சொன்னவர். ஏழைகளுக்கு உதவிடும் பொருட்டு நாமும் எளிமையை கடைபிடித்தால் புண்ணியமாகும்.

**ஏழ்மை அனுபவம்:** ஏழையரின் வருத்தங்களை வரிகளிலே வடிக்க முடியாது. அப்படியே செய்தாலும் அது உள்ளத்தை தொடாது. ஏழ்மை ஒரு அனுபவம். ஆந்திர முதல்வர் திரு. ஜெகன் மோகன் அவர்கள் இந்த அனுபவத்தை தன் அரசு உயர் அதிகாரிகள் பெற வேண்டும் என்று அறிவுறுத்துகின்றார். முன் அறிவிப்பு செய்யாமல், அதிகாரிகள் அரசு மருத்துவமனைகளுக்கும்,காப்பகங்களுக்கும், கிராமங்களுக்கும் சென்று தங்கி (உறங்கி) மக்களின் அவதிகளை அனுபவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறார். துறவோரும் தங்களை மக்களிடம் இருந்து அன்னியப் படுத்திக் கொள்ளாமல், ஐக்கியப்படுத்திக் கொள்வது எளிமை அடையாளம். இது, ஒரு துறவறச் சபையின் தலைவி என்னுடன் பகிர்ந்துகொண்ட அவா. இது வரவேற்க தக்கது தானே.

**கிறிஸ்துவத்தின் அடிப்படை பண்பு:** பொருள் இருப்பவர்கள், இல்லாதவரோடு பகிர்ந்துகொண்டால் ஏழ்மை ஒழியும். “எது வந்தபோதும் பொது வென்று வைத்து வாழ்கின்ற பேரை வாழ்த்திடுவோம். (கவிஞர் வாலி) இதுவே கிறிஸ்துவத்தின் அடிப்படை பண்பு. தொடக்க கால கிறிஸ்தவர்களின் வாழ்வு இதற்கு சான்று பகர்கிறது. “நம்பிக்கை கொண்டோர் அனைவரும் ஒன்றாய் இருந்தனர்; எல்லா உடைமைகளையும் பொதுவாய் வைத்திருந்தனர். நிலபுன்களும் பிற உடமைகளும் உடையோர் அவற்றை விற்று, அனைவருக்கும் அவரவர் தேவைகளுக்கேற்ப பகிர்ந்தளித்தனர். பேருவகையோடும் எளிய உள்ளத்தோடும் வீடுகள்தோறும் அப்பத்தை பிட்டு, உணவைப் பகிர்ந்து உண்டு வந்தனர்” (தி.ப.2:44-46)

**என்ன செய்யலாம்?** உலகோடு ஒட்ட ஒழுகல் என்று சொல்லி, உடைகள், உணவு தொடங்கி நமக்கு ஒவ்வாத அனைத்தையும் கடைபிடிக்கும் நுகர்வு கலாச்சாரத்தால் அழிந்துவிட வேண்டாமே. வளர்ச்சி, இன்றைய கலாச்சாரம் என்று சொல்லி எளிமையை கைவிடுவது கிறிஸ்தவ பண்பாடாகாது. ஏழையருக்கு கருணை காட்டாமல் வாழ்பவரை கொடுமை செய்பவர் என்றும், வாழ்வின் குறிக்கோளை மறந்தவர் என்றும் வள்ளுவர் கூறுவார். “பொருள்நீங்கிப் பொச்சாந்தார் என்பர் அருள்நீங்கி அல்லவை செய்து ஒழுகுவார்” (குறள் 246). உலகச் செல்வத்தைக் கொண்டு விண்ணக வாழ்வை உரிமையாக்கிக்கொள்ள ஏழையரை அன்பு செய்வோம்; எளிமையை கடைபிடிப்போம்.




ஆண்டின் பொதுக்காலம் 32ம் ஞாயிறு (10-11-2019)

# “மறுவுலக வாழ்வின் மக்களாக...”



**அருள்திரு. P. லூர்து ஜெயராஜ்,**
**துணை முதல்வர், பெத்தி செமினேர் மேல்நிலைப் பள்ளி, புதுவை.**

இந்த நவம்பர் மாதம் இறந்தவர்களை நினைவு கூர்ந்து அவர்களுக்காக சிறப்பாக செபிக்கின்ற மாதம். மேலும் ஒவ்வொரு முறையும் கல்லறையைப் பார்க்கும் போதும் நாமும் ஒருநாள் இங்கு வந்து துயில்கொள்வோம் என்ற எண்ணம் மனதில் எழுகிறது. உயிர்த்தெழுதலில் நமக்கிருக்கும் இறைநம்பிக்கை, இறந்தவர்களுக்காக, உத்தரிக்கிற நிலையில் இருக்கும் ஆன்மாக்களுக்காக, யாரும் நினையாத ஆன்மாக்களுக்காக நம்மை செபிக்க அழைக்கின்றது. ஏறக்குறைய திருவழிபாட்டு மூன்றாம் ஆண்டு முடியும் நிலையில் இருப்பதால், கத்தோலிக்க திருஅவை நம்முடைய இறுதிக்கால வாழ்வை நோக்கியும், மறுவுலக வாழ்வை நோக்கியும் தியானிக்க வேண்டுகோள் விடுக்கிறது.

**சதுசேயர்கள்:** கடந்த இரண்டு வாரங்களாக ஞாயிறு மறையுரை சிந்தனைகளிலே பரிசேயர்கள், வரி தண்டுபவர்கள் இவர்களைப் பற்றி சற்று விரிவாக சிந்தித்தோம். இன்று சதுசேயர்களைப் பற்றி சற்று அறிந்துகொள்வோம். சதுசேயர்களும் நன்கு படித்தவர்கள், எப்பொழுதும் அரசவை உறுப்பினர்கள், யூத சமுதாயத்தில் பெரிய நிலையில் இருந்தவர்கள். உயிர்ப்பு, வானதூதர்கள், மறுவாழ்வு இப்படி காணாதவைகள் மேல் இவர்களுக்கு துளியளவும் நம்பிக்கை இல்லை. விவிலியத்தில் “தோரா” எனப்படும் பழைய ஏற்பாட்டில் முதல் ஐந்து நூல்களை மட்டும்தான் கடவுள் வெளிப்படுத்திய நூல்களாக இவர்கள் ஏற்றுக்கொண்டனர். மற்ற நூல்கள் அனைத்தும் சாதாரண மனிதர்கள் தந்தது என்பது இவர்கள் விவாதம். தாவீது மற்றும் சாலமோனின் காலத்தில் முதன்மைக் குருவாக இருந்த சாதோக் என்பவரின் வழிவந்தவர்கள் என்று தங்களையே அடையாளப்படுத்திக் கொள்வர். மேலும் கிரேக்கர்களைப்போல இவர்களும் ஆன்மா அழிவதில்லை என்னும் கோட்பாட்டை நம்பினர் (சாஞா. 3:4;8:13; 15:31). இன்றைய நற்செய்தியில் இயேசுவிடம் வந்த சதுசேயர்களை வழக்கம் போல லூக்கா, “உயிர்த்தெழுதலை மறுக்கும் சதுசேயர்” என்று இவர்களை அறிமுகம் செய்கின்றார்.

**ஆணாதிக்க யூத சமுதாயம்:** ஒரு பெண்ணின் கணவன் இறந்துவிட்டால் அவருடைய கொழுந்தனே அப்பெண்ணை மனைவியாக ஏற்றுத் தம் சகோதரருக்கு வழிமரபு உண்டாக்க வேண்டும் என்பது மோசே வழங்கிய சட்டம் (இச.25:5-6). இவ்வாறு ஏழு சகோதரர்களையும் ஒருவர்பின் ஒருவராக மணந்த ஒரு பெண் “உயிர்த்தெழும்போது யாருக்கு மனைவி ஆவார்?” என்பது சதுசேயர் எழுப்பிய தந்திரக்கேள்வி. இந்தச்சட்டம் ஆணுக்கும், அவனது வாரிசுக்கும் முக்கியத்துவம் கொடுத்ததே தவிர பெண்ணின் இன்ப, துன்பங்களைப் பற்றி அக்கறைக் கொள்ளவே இல்லை. மேலும் யூதர்களின் சிந்தனைப்படி இறப்பை நம்மால் வெல்ல முடியும். எப்படி? என் வித்தை நான் என் குழந்தையாக உருவாக்கி இவ்வுலகில் விட்டுச் செல்வேன். அவன் இன்னொரு குழந்தையைப் பெற்றெடுப்பான். இப்படி சந்ததி சென்று கொண்டே இருக்கும். ஆகவே எனக்கு அல்லது என் சந்ததிக்கு இறப்பே கிடையாது வாரிசு ஆணாக இருக்க வேண்டும் என்பதுதான் முக்கியம். ஆகையால்தான் யூத மரபில் மணத்துறவு என்பது அறவே கிடையாது. ஒருவர் மணத்துறவை மேற்கொள்ளும்போது தன் மூதாதையர்களின் வாரிசு வரிசையை தடை செய்கிறார் என்று பொருள்.

**உயிர்ப்புக்கும் ஒரு வாய்ப்பு:** இறந்த நாம் அனைவரும் கண்டிப்பாக ஒருநாள் மீண்டும் உயிர்த்தெழுவோம், மறுவுலக வாழ்வு பெறுவோம் என்று கூற இந்த சதுசேயர்கள் கேட்ட கேள்வி இயேசுவுக்கு ஒரு வாய்ப்பாக அமைந்தது. இந்த உலகில் நாம் வாழும்போது காலத்திற்கும் இடத்திற்கும் உட்பட்டு வாழ்கின் றோம். ஆனால் மறுவுலகில் காலம்-இடம் என்பது கிடையாது. காலம் - இடம் என்று இருக்கும் போதுதான் வரிசை உருவாகு கின்றது ஆனால் அங்கே வரிசை இல்லை. எல்லாரும் ஒன்று போல ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் இருப்பர். இரண்டாவதாக “பெண் கொள்வதுமில்லை; பெண் கொடுப்பதுமில்லை.” அதாவது திருமணம் செய்து சந்ததியை உருவாக்க வேண்டும் என்ற நிலை இல்லை. “கடவுளின் மக்களாக” இருப்பர், ஏனென்றால் “திருமணம்” என்ற நிலையிலிருந்து தள்ளி இருப்பவர்களே கடவுளின் மக்கள் (தொ.நூ.6:1-4). இந்த சிந்தனை ஓட்டத்தையே நாம் இன்றைய முதல் வாசகத்திலும் பார்க்கிறோம். “நாங்கள் இறந்த பின் என்றென்றும் வாழுமாறு அனைத்துலக அரசர் எங்களை உயிர்த்தெழச் செய்வார்.” ஆகவே உயிர்த்தெழுந் தவர்கள் அனைவரும் மறுவுலக வாழ்வைப் பெறுவார்கள் என்பது உறுதி.

**இயேசுவின் விவேகம்:** சதுசேயர்கள் விவிலியத்தின் பழைய ஏற்பாட்டில் முதல் ஐந்து நூல்களை மட்டும்தான் ஏற்றுக்கொள்ளக் கூடியவர்கள் என்பதால் அவர்களின் இரண்டாம் நூலிலிருந்து அதாவது மோசேயின் அழைப்பு (விப.3) நிகழ்வை மேற்கோள் காட்டி “கடவுள் இறந்தோரின் கடவுள் அல்ல; மாறாக வாழ்வோரின் கடவுள்” என்கிறார். மேலும் கடவுள் மோசேக்கு தன்னையே வெளிப்படுத்தும் போது, தன்னை “ஆபிரகாம், ஈசாக், யாக்கோபின் கடவுள்” என முன் மொழிகிறார். அதாவது கடவுளைப் பொறுத்தவரையில் அவருக்கு நிகழ்காலம் மட்டுமே. கடவுளை பொறுத்தமட்டில் இறந்த ஆபிரகாம், ஈசாக், யாக்கோபு, மோசே என அனைவரும் ஒரே நிலையில் நிகழ்காலத்தில் வாழ்கின்றனர். இறந்தவர் - இருக்கிறவர் என்ற பாகுபாடே இல்லை.

**மறுவுலக வாழ்வின் மக்களாக...:** உயிர்ப்பில், மறுவாழ்வில் நம்பிக்கை என்பது நம் கத்தோலிக்க கிறிஸ்துவ வாழ்க்கைக்கு மிக அவசியமான ஒரு கோட்பாடு. மறுவுலக வாழ்வில் நம்பிக்கை கொண்டவர்கள் இவ்வுலக வாழ்விலும் நேர்மையோடும், அறநெறியோடும் வாழ்வார்கள். மறுவுலக வாழ்வில் நம்பிக்கை அற்றவர்கள் தான் இவ்வுலக வாழ்வில் எந்தவொரு கட்டுபாடுமின்றி வாழ்வார்கள். உண்போம், குடிப்போம், நாளை மடிவோம் என்று ஒரு பிடிப்பில்லாமல் வாழ்வார்கள். மறுவுலக வாழ்வில் நம்பிக்கை கொண்டோர் மறுவாழ்வுக்கான ஆயத்தப் பணிகளை இந்த உலகிலேயே செய்வார்கள். இறந்தோரை நினைவு கூறும் இந்த மாதத்தில் நமது மறுவுலக வாழ்வு நம்பிக்கையை இன்னும் கொஞ்சம் ஆழப்படுத்திக்கொள்வோம். “வாழ்வது ஒருமுறை வாழ்த்தட்டும் தலைமுறை” என்று கூறுவது போல, இவ்வுலக வாழ்வையே அதிக பொருள் உள்ளதாக வாழ்ந்து, மறுவுலக வாழ்வின் மக்களாவோம்.

## புதுவை மிஷன் அச்சகம்

## தோள் கொடுப்பீர்! தாங்கிடுவீர்!!

**மிஷன் அச்சக புனரமைப்புக்காக நன்கொடை வழங்கியவர்கள்**

| | |
|---|---|
| சென்ற வார மொத்த வரவு | ரூபாய் 99,900 |
| 1) பெயர் வெளியிட விரும்பாதவர், புதுச்சேரி | 2000.00 |
| 2) S. கமலம், காஜாபட்டி, திருச்சி | 500.00 |
| 3) A. ஜோசப், பெங்களூர் | 500.00 |
| 4) M. சூசை இக்னிஷியஸ், திருநெல்வேலி | 5000.00 |
| 5) A. ததேயுஸ், நாகர்கோவில் | 500.00 |
| 6) பெயர் வெளியிட விரும்பாதவர், பிரான்ஸ் | 5000.00 |
| 7) A. நோயல் பன்னீர்செல்வம், கோட்டகுப்பம். | 2000.00 |
| 8) பெயர் வெளியிட விரும்பாதவர், புதுவை | 1000.00 |
| 9) A. தாமஸ், திருச்சி-2. | 500.00 |
| 10) S.D.அந்தோனி மார்டின், கம்பன் நகர், ரெட்டியார்பாளையம். | 2000.00 |
| 11) A. அருள்மேரி, கொமரபாளையம், கோவை. | 1000.00 |

தாராள உள்ளத்தோடு நன்கொடை கொடுத்து உதவிய நல் உள்ளங்களுக்கு நன்றி. மற்றவர்களும் உதவிட அன்பு கலந்த இறையாசீரோடு கேட்டுக் கொள்கிறோம். **- மேலாளர்.**



# வரங்களின் வாய்க்கால்கள்...19

Dr.Sr.M.லில்லி மரி ME, புதுச்சேரி.

**அது ஒரு திறவு கோல்:** மரியாவின் “ஆம்” என்ற வார்த்தையால் சம்பாதிக்கப்பட்ட கருவூலத்தின் திறவு கோல் செபமாலை.

**அது ஒரு செபம் :** தண்ணீரை திராட்சை இரசமாக இறைவன் மாற்றும்படிச் செய்த செபம்.

**அது ஒரு வாயில் :** பேறுபெற்றவர்களின் மன நிலையில் நுழைபவர்களின் வாயில்!

**அது ஒரு கரம்:** நம்மை இறைச் சித்தப்படி நடத்தும் கரம்.

**அது ஒரு சங்கிலி:** அது மனுக்குலத்தைத் தாயின் இதயத்தோடு இணைக்கும் சங்கிலி!

மரியாள் காட்சி தந்த போதெல்லாம் செபிக்கும்படிக் கேட்டார்கள்.

*“செபம் செய்யுங்கள்! செபம் செய்யுங்கள்!”*

அவருடைய பார்வை செபமாலையை நோக்குகிறது. அவருடைய கரம் செபமாலையை நீட்டுகிறது. இது சிரமமாக இருந்தால் ஒரு வேளை கீழ்ப்படிவோமோ... (2 அரச 5:13) இது மிகவும் எளிதானது இதற்கு மேலாக எதுவும் கேட்க வில்லை! அவர் சொல்வதை எல்லாம் செய்வோம். கீழ்ப்படித லுள்ள பணியாளரைப் போல குடங்களை நிரப்புவோம். மிகுதியான கசப்பைப் புகழ்ச்சியாகவும், பகைமையை அன்பாகவும் சிறுமையை வலிமையாகவும் நம்பிக்கை யின்மையை நம்பிக்கையாகவும் இறைவன் மாற்ற செபம் செய்வோம். அது போதும்.

**ஒரு நாள்,** நம்முடைய நாள் வரும். அன்று நம் கைகளில் நமக்கு நெருக்கமானவர்கள் செபமாலையைச் சுற்றுவார்கள்!

**ஒரு நாள்** நமது பாஸ்க்கு நாட்கள் பல கடந்து... நிலத்தை அகழ்ந்து ஆய்வோர் நமது சவப் பெட்டியில் பொன்னையோ வெள்ளியையோ காணமாட்டார்கள். செபமாலையைக் கண்டெடுப்பார்கள். எத்தகைய சொத்துப் பத்திரம் அது!

நாம் நம் மாட்சியுற்ற கண்களால் அந்த செபமாலையைப் பார்ப்போம். வெறும் “அருள் நிறைந்த மரியே வாழ்க!” என்ற செபங்களால் ஆன செபமாலை விண்ணுலகில் மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுப்பதைக் காண்போம்.

சிலுவையின் மீது அழகான இதயத்துடன் பெற்றுக்கொண்ட செபமாலையை பயன்படுத்துவோம். “அருள் நிறைந்த மரியே...” என்னும் செபத்தை நாம் செல்லும் பாதைகளில் எல்லாம் விதைப்போம்.

நாம் சந்திக்கும் இதயங்களில் எல்லாம் அந்த செபத்தை விதைப்போம். செபமாலையை நிறுத்தி நிதானமாகச் சொல்லுவோம். விசுவாசத்தோடு சொல்லுவோம். நம்பிக்கை யோடு சொல்லுவோம். எளிய மக்கள் எல்லோருடைய கருத்து களுக்காகவும் சொல்லுவோம். அவ்வாறாக மேலானதை மற்றவர்களுக்குக் கொடுப்போம்.

நம்முடைய செபங்களை அவர்களுடைய கைகளில் மரியிடம் ஒப்புக்கொடுப்போம். மரியின் பிரசன்னத்தை அவர்களுக்குக் கொடுப்போம். ஒவ்வொரு நாளும் இன்னும் அதிகமாக மரியாளின் பிரசன்னத்தை நாம் சந்திக்கும் அனைவருக்கும் அளிப்போம்.

குழந்தைகளுக்காக நண்பர்களுக்காக செபிப்போம். தேவையில் உள்ள ஒவ்வொருவருக்காகவும் செபிப்போம். இன்றும் நாளையும் அவர்களுக்காக... நம்முடைய ஞான பெற்றோருக்காக செபிப்போம் ... மாசற்ற மரியாள் மூலமாக கடவுள் நம்மை ஆசீர்வதிப்பார்.

செபமாலையை முறைப்படி செபிப்பதில் தனி செப மனப்பான்மை உணரப்படுகிறது. சிலர் மணிகள் எண்ணுவதற்காக மட்டுமே செபமாலை பயன்படுகிறது என்று எண்ணுகின்றனர். எனவே விரல்களைவிட்டு செபிப்பது அல்லது மோதிர செபமாலையைப் பயன்படுத்துவது என்று பல முறைகளைக் கையாளுகின்றனர். இது தவறு என்று நான் சொல்லவில்லை. ஆனாலும் ஆன்மீக அனுபவம் உள்ளவர்கள் விரல்களுக்கிடையே மணிகளை உருட்டி செபிப்பது சிறந்தது என்று பல உதாரணங்களால் விளக்குகின்றனர்.

உலகிலேயே அதிகமாகச் செபிக்கப்படும் செபம் செபமாலை. வரங்களை வழங்கும் முக்கியமான வாய்க்கால்கள் திருவருட்சாதனங்களாகும்.

**திருமுழுக்கு:** இது திருவாழ்வுக்கும் இறையரசுக்கும் நுழைவாயில். இறையருள் வரும் வாய்க்கால்களுக்கு எல்லாம் தொடக்கமும் முதலுமானது. நம்மை இறைவனின் பிள்ளையாக அது பிறக்கச் செய்கிறது. மேலும் மற்ற திருவருட்சாதனங்களைப் பெற உரிமை அளிக்கிறது. இதன் வழியாக இயேசுவோடு இணைக்கப்பட்டு அவருடைய அரச குருத்துவத்தில் பங்குபெறச் செய்கிறது. நம்மை எல்லாப் பாவங்களிலிருந்தும் கழுவி அருள் நிலையில் வைக்கிறது.

Satanic இயக்கத்தில் சேர்ந்த ஓர் இளைஞன் தன் கையில் இரத்த நாளத்தை அறுத்துக்கொண்டு தற்கொலை புரிந்துகொண்டான். அவனுடைய அறையைச் சோதனை யிட்டபோது அவனுடைய நாட்குறிப்பேட்டில் “திருமுழுக்கை விட்டுவிடுகிறேன். சாத்தானை விசுவசிக்கிறேன்.” என்று தன் இரத்தத்தால் எழுதியிருந்தான். திருமுழுக்கு பெற்றவர்களைச் சாத்தானால் சொந்தமாக்கிக் கொள்ள முடியாது. திருமுழுக்கைப் பெறுபவர் இறையன்பிலும் பிறரன்பிலும் ஆழ்ந்த நம்பிக்கையிலும் வளர வேண்டும்.

**உறுதி பூசுதல்:** திருமுழுக்கினால் மறுபிறப்பு அடைந்த நாம் உறுதிப்பூசுதலினால் நம் ஆன்மாவிலேயே தூய ஆவியாரின் அழியா முத்திரை பெறுவதுடன், நம் வாழ்விலே உறுதிப்படுத்தப்படுகிறோம். திருநிலைப்படுத்தப்படுகிறோம். அதனால் நாம் கிறிஸ்துவின் மறையுடலின் உறுப்பினராக முதிர்ச்சி பெறுகின்றோம். கிறிஸ்துவுக்குச் சான்று பகரும் பொறுப்பையும் பெறுகிறோம். கிறிஸ்துவுக்குச் சான்று பகரும் பொறுப்பையும் பெற்றுக்கொள்கிறோம்.

**நற்கருணை:** வரங்களை வழங்கும் நாயகரையே அளிக்கும் அருட்சாதனம் நற்கருணை. திருமுழுக்கு பெற்று, ஒப்புரவு அருட்சாதனம் பெற்று அல்லது தூய உள்ளத்தோடு பெற வேண்டிய அருட்சாதனம் இது. தூய்மையாக இருக்க வேண்டும் என்பதை இறுதி இராவுணவின்போது இயேசு தம் சீடர்களின் பாதங்களைக் கழுவும் செயலால் உணர்த்தினார். மேலும் யூதாஸ் தூய்மையாக இல்லை என்பதை “நீங்கள் எல்லோரும் தூய்மையாக இல்லை” என்னும் வார்த்தையால் உள்ளத் தூய்மையைச் சுட்டிக்காட்டினார். இந்த அருட்சாதனத்தின் வாய்க்காலை நற்கருணைப் பலியில் பங்கு பெறுவதன் மூலமாகவும் நற்கருணை நாதரைச் சந்தித்து ஆராதனை செய்வதன் மூலமும் அணுகலாம். நற்கருணையில் இயேசுவின் உண்மையான பிரசன்னத்தை மறுப்பவர்கள் திருஅவையின் உறுப்பினராக இருக்க முடியாது.

தொடரும்



# நீ, நீயாக இரு

– சுவாமி ஆ. லூயிஸ்.

இறைவனுடைய தொடர் படைப்பை உற்று நோக்கினால், நாம் ஒவ்வொருவரும் மெய்சிலிர்த்து ஆழ்ந்த வியப்பில் படைப்பில் தான், தனது என்பதை இரண்டறக் கலந்து விடுவோம். படைப்பில் ஒவ்வொன்றும் தனித்தன்மையோடு விளங்குகிறது. இரண்டு பொருட்கள் அல்லது இரண்டு ஆட்கள் ஒன்றுபோல் இல்லை. இவ்வாறு கடவுளின் தனித்தன்மையை படைப்பு ஒவ்வொன்றும் பறைச்சாற்றி வருகின்றது. அவருடைய விருப்பத்தின்படி, படைப்பின்படி, திட்டத்தின்படி ஒவ்வொன்றும், ஒவ்வொரு வரும் தனிச்சிறப்போடு, தன் சுயத்தோடு விளங்குவதுதான் படைப்பின் நியதி. எனவே நீ, நீயாக இரு என உணர்வோம்.

**குழந்தைப் பருவம்:** “அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்” என்பது வழிவரும் பழமொழி. வளராத நிலையில் குழந்தை அப்பா அம்மாவிடமிருந்து அசைவு, சப்தம், மொழி பழக்க வழக்கம் இவைகளைச் சாதாரண மாகக் கற்றுக்கொள்கிறது. இவ்வழி வரும் பழக்கத்திற்கும் இன்றைய சூழ்நிலையில் பல்வேறுவிதமான சோதனை களைக் குழந்தைகள் சந்திக்க வேண்டியுள்ளது என்பது ஒரு பெரிய சவால். அப்பா இன்றி, அம்மா இன்றி குழந்தைகள் வளர்த்தெடுக்கப்படுவதால் வரும் தொல்லை களை இன்றைய சமுதாயம் சந்தித்து வருகின்றது. முதியோரின் தலைமுறை பழக்கம் வேறு, இளையோரின் பழக்க வழக்கம் வேறு என்பதை ஏற்போம். இதனால் வரும் சாதனைகள், சோதனைகள் பல உண்டு. இவைகளைக் கண்காணிக்க எத்தகைய வழிமுறைகளை நவீன சமூகம் தயாராக வைத்துள்ளது என்றும் யோசிப்போம். உயிர் ஒன்றாக இருப்பினும், உடல்கள் பெறும் பயிற்சி பலவகைப் படுகின்றது.

**வளரும் பருவம்:** குழந்தைப் பருவத்தைக் கடந்து சுயமாக வளரும் பருவம் இன்று எவ்வாறு உள்ளது என்பதும் நமது கவனத்தை ஈர்க்க வேண்டும். கடந்த காலத்தில் இருந்ததுபோல் இன்று இருக்க வாய்ப்புகள் மிகவும் குறைவாக உள்ளது. தொடர்புசாதனங்கள் வளரும் பருவத்தில் ஆதிக்கம் செலுத்துகிறது. தொடர்பு சாதனங்களின் சாதனை முப்பது விழுக்காடு என்றால், எழுபது விழுக்காடு சோதனைகள் நிறைந்துள்ளது. இதனால் வளரும் பருவம் மிகவும் பாதிக்கப்படுகிறது. கல்விக் கூடங்களிலும் சமூக வாழ்விலும் இடம்பெறும் தொடர்புகள், பரிமாற்றங்கள் பல்வகைப் படுகின்றன. இத்தகைய சூழலை அப்படியே ஏற்றுக்கொள்வதா, கலந்துரையாடி நல்லவைகளை ஏற்று, அல்லவைகளை அகற்றுவதா என்பது மிகப்பெரிய சவாலாகும்.

**இளமைப் பருவம்:** ஓரளவு வளர்ந்தப் பிறகு நமது பிள்ளைகள் ஒரு புதிய உலகத்தை சமூகத்தில் சந்திக்கின் றார்கள். ஆர்வத்தோடு சமூகத்தில் தங்கள் வளர்ச்சியை, தங்களது தனித்தன்மையை பல்வேறு அனுபவங்களுக் கிடையில் கொண்டாடுகின்றார்கள். ஆர்வத்தின் அடை யாளமாய் கதாநாயகர்களையும், கதாநாயகிகளையும் பல்வேறுத் துறைகளில் கண்டு, சிறப்பாக வெள்ளித் திரை களில், விளையாட்டு களங்களில் கண்டு தூண்டுதல், ஏவுதல் பெறுகின்றனர். எல்லாரும் வெற்றி பெறவில்லை என்றாலும் வளர்ச்சியின் பாதையில் பயணிக்கின்றனர். போட்டிகட்கு நடுவில் சவால்கள், வெற்றி, தோல்விகள் என சந்தித்து முதிர்ச்சிப் பெறுகின்றனர். வீடும் சமூகமும் பயிற்சித்தளங்களும் இவைகளை இன்று வளர்த்து வருகிறது. இன்னமும் அதிக அதிகமாக அனைத்து இளம் உள்ளங்களும் பங்கெடுப்பது பெருமைக்குரியது.

**தனித்தனமை:** இறைவன் நம் ஒவ்வொருவரையும் எவ்வாறு இருக்கவேண்டுமென விரும்புகின்றார் என்பதை உணர்ந்து உயருவது வாழ்வின் வளர்ச்சியாகும். தனித்தன்மை சரியான முறையில் உணரப்படின் நன்று, சுயநலத்தோடு உணரப்பட்டால் நம்மை நாம் திருத்திக் கொள்வது மேலானது. இவ்வாறு தனித்தன்மை பொதுத்தன்மையில் உயர்வடையும், பொதுத்தன்மை தனித்தன்மையை நிலைநாட்டும். இம்மறைபொருள் இயேசுவிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளலாம். தனக்காக வாழாமல் மற்றவர்களுக்காக வாழ்ந்ததால் அவரின் தனித்தன்மை சிறப்பாக வெளிப்படுகிறது. இந்நிலையில் கடவுளின் குழந்தைகள் பல்வேறு விதத்தில் இல்லறம், நல்லறம், துறவறம் என்ற நிலையில் வெளிப்படுத்து கின்றனர். நமக்குப் பல சோதனைகள் இருப்பினும் அடுத்தவருக்காக வாழ்வதே வாழ்வின் பயன் என்பதை உணர்ந்து வாழ்ந்து வருவதை நாம் பாராட்டி வளர்த்தெடுப்பது மிகவும் பெருமைக்குரியதாகும்.

**பொதுத்தன்மை:** ஒருவருடைய தனித்தன்மை சரியான முறையில் இயேசுவில் நசரேத்தில் முப்பது ஆண்டுகள் வளர்ந்தது போல நம்மில் வளர்ந்துவிட்டால் பொதுத்தன்மை பூமியில் மலர, மணம் பரப்ப ஆரம்பித்துவிடும். இவ்வாறு வாழ்வதை நமது பெற் றோர்கள், ஆசிரியர்கள், வழிகாட்டிகள் இவர்களிட மிருந்து கற்றுக்கொள்வோம். சுயநலப்புலிகள் என்ற சோதனை உண்டு, இருப்பினும் ஒருவர் தன்னை முழுமையாகப் புரிந்துவிட்டால், விடுதலை வாழ்வைத் தழுவி வாழ்வோம்.

நமது உடல் பஞ்சபூதத்தில் இருந்து வழங்கப் படுகிறது நமது பெற்றோர் வழியாக, நமது உயிர் கடவுளிடமிருந்து வழங்கப்படுகிறது. இவ்வாறு இலவசமாகப் பெற்ற வாழ்வை சுயநலத்தோடு வாழாமல், பொது நலனோடு வாழ்வதே வாழ்வு என்ற உண்மையை கடந்த கால, நிகழ்கால, வருங்கால அனுபவத்தில் இருந்து அறிந்து கொள்வோம். தன் நண்பர்களுக்காக தன் உயிரைக் கொடுப்பதைவிட மேலான அன்பு வேறு இல்லை என்பதை இறைவனின் திருமகன் மனித குலத்திற்கு அறிவித்துள்ளார் என்பதை அன்றாடத் திருப்பலி, திருவிருந்து நமக்கு நினைவூட்டவே, இதை என் நினைவாகச் செய்யுங்கள் என்ற வேண்டுகோளை நமக்கு விட்டுச் சென்றார்.

**உன்னையே அறிவாய்:** ஒருவர் தன்னை முழுமையாகக அறிந்துவிட்டால் உலகில் துன்பம் இல்லை, தனி ஒருவருக்கும் துயரமில்லை. வாழ்வை முழுமையாக ஏற்றுக்கொண்டு, முழுமையாக வாழ்ந்து இயேசுவைப் போல அனைவரும், சிறப்பாக கிறிஸ்தவர் களும் வாழ்ந்து வந்தால் இப்பூமி இறையரசாகும் என்பதில் சந்தேகமில்லை. இத்தகைய அரும்பணியைத் தான் திருச்சபை செய்து கொண்டு வருகிறது என்பதை பணிவோடு பறைச்சாற்றுவோம், மற்றவர்களும் வாழ்வதை கண்டுணர்வோம். இயேசுவைப்போல இறைவல்லமையால் எதிர்வரும் சோதனைகளை மேற்கொண்டு பொருள்மிகு அருள்வாழ்வை வாழ்வோம், வாழவைப்போம், வேண்டிக்கொள்வோம். வாழ்க! வளர்க!

# இறையாட்சிப் பணியில் பெண்கள்

- அருட்சகோதரி **டெரன்ஸ்மேரி,** FIHM கடலூர்

**கருத்துரை - 10**

**பிற இனக் கனானியப் பெண் இராகாபு**

தொடர்கிறார் இராகாபு...

**விலைமாது விவிலிய கதாபாத்திரமாகிறார்.**

கிரேக்க இலக்கியத்தில் மூன்றுவகை விபச்சாரிகளைக் காணலாம்.

1. அடிமை விபச்சாரி
2. சுதந்திரமான தெரு விபச்சாரி
3. படித்த விபச்சாரி

முதல் இரண்டிலும் இரு பாலரும் ஈடுபட்டனர். மூன்றாம் நிலையில் பெண்கள் மட்டுமே ஈடுபட்டனர். சமூக செல்வாக்கு உள்ளவர்கள் மட்டுமே மூன்றாம் பிரிவினரை நாடிச் செல்வர். யோசுவா அனுப்பிய சமூக அந்தஸ்துள்ள ஒற்றர்கள் நேராக இராகாபைத் தேடிச் செல்வதால், இராகாபு படிப்பறிவுள்ள விலைமாது என்பது புலப்படுகிறது.

**விபச்சாரக் கலாச்சாரம் இடத்திற்கு இடம் மாறுபட்டிருக்கிறது.**

விபச்சாரிகளின் தாயாக **பாபிலோன்** கருதப்படுவதால், இது பூமியின் அருவருப்பு என்றும் அழைக்கப்படுகிறது.

**எகிப்து,** அதிகாரப்பூர்வமாக விபச்சாரத்தை எதிர்த்து நிற்கிறது என்றாலும் நடைமுறையில் இத்தொழில் எகிப்திலும் இருந்து வந்திருக்கிறது.

பெரும்பாலும் விலைமாதினர் முக்காடிட்டுத் தங்களை மறைத்துக்கொண்டு, முக்கிய வீதிகளில் அமர்ந்து கொள்வர். **(தொ.நூ 38:14-26)- ல் தாமார் முக்காடிட்டுத் தம்மை மறைத்துக்கொண்டு திம்னாவுக்குச் செல்லும் பாதையில் இருந்த ஏனாயிம் நகர் வாயிலில் அமர்ந்து கொண்டார். யூதா அவரைக் கண்டபோது, அவர் முகம் மூடியிருந்ததால் அவர் ஒரு விலைமாது என்று நினைத்தார்," என்று குறிப்பிட்டுள்ளதைக் காணலாம்.** வருமானத்திற்காக பெண்கள் இத்தொழிலில் அதிகம் ஈடுபடுவதை இன்றும் பார்க்க முடிகிறது. அன்றைய நாட்களில் ஆடு, மாடு, அதிகம் உள்ளவர்களைத்தான் உயர்ந்த அந்தஸ்தில் இருப்பவர்களாக சமுதாயம் மதித்தது. அக்காலக் கட்டத்தில் அதிகபட்ச ஊதியமாக விலைமாதினர் விரும்புவது ஆட்டுக்குட்டி. அவ்வமயம் அதைத்தர இயலவில்லை என்றால் தம்மிடம் உள்ள விலைஉயர்ந்த பொருட்களை அடையாளமாகக் கொடுத்துச் செல்வர். பின் வந்து ஆட்டுக்குட்டியைக் கொடுத்துவிட்டு அடையாளப் பொருட்களைப் பெற்றுச் செல்வர். **(தொ.நூ 38:16-18) தாமார் முக்காடிட்டிருந்ததால், யாரென்று அறியாத யூதா, தாமாரிடம் தன்னுடன் உடலுறவு கொள்ளுமாறு அழைத்தார். அதற்கு அவர், என்னோடு உடலுறவு கொள்வதற்கு என்ன தருவீர்? என்று கேட்டார். அதற்கு அவர், என் மந்தையிலிருந்து உனக்கு ஒரு வெள்ளாட்டுக்கிடாய் அனுப்புகிறேன், என்றார். அதற்கு அவர், நீர் அடையாளம் தருவீரா? என்று கேட்டார். அடையாளமாக உனக்கு நான் என்ன தரவேண்டும்? என்று அவர் கேட்க, தாமார், உம்முடைய முத்திரை மோதிரத்தையும் இடைவாளையும், கைக்கோலையும் தரவேண்டும்** என்றார்.

குடும்பத்தில் உள்ள அழகான பெண்களைக் கோவிலுக்கு அளிப்பதும் அக்கால வழக்கமாக இருந்தது. ஆலய குருகுலத்தார் இப்பெண்களைப் பயன்படுத்திக் கொள்வர். விரும்பியும் விரும்பாமலும்கூட இத்தொழிலில் ஈடுபடுபவர்கள் உண்டு. **இறைவாசமும், இறைசுவாசமும் இல்லாத** இப்படி ஒரு சமூக கலாச்சாரத்திற்கு மத்தியில்தான் இராகாபு வாழ்ந்து வருகிறார்.

(வி.ப 12:13) ஆண்டவர் எகிப்து நாட்டைத் தண்டித்தபோது, இஸ்ரயேலரை அவர்கள் நடுவினின்று காப்பாற்ற, **இரத்தத்தை இரு கதவு நிலைகளிலும், மேல்ச் சட்டத்திலும் பூசுமாறு கூறுகிறார். இரத்தம் நீங்கள் இருக்கும் வீடுகளில் உங்களுக்கு அடையாளமாக இருக்கும். நான் இரத்தத்தைக் கண்டு உங்களைக் கடந்துசெல்வேன்.**

இதே போன்றுதான் இராகாபையும் அவரது குடும்பத்தாரையும் காப்பாற்ற, சிவப்புக் கயிற்றை ராகாபின் வீட்டுச் சாளரத்தில் அடையாளமாகத் தொங்கவிடுமாறு, ஒற்றர்கள் கூறிச் செல்கின்றனர். **(யோசுவா 2:18) அப்போது, நாங்கள் உங்கள் இல்லத்தைக் அழிக்காது கடந்து செல்வோம் என்று வாக்களிக்கிறார்கள்."** பாவத்தினால் கருஞ்சிவப்பு நிறமாக இருந்த இராகாபை சிவப்புக் கயிறு பாதுகாக்கிறது. இவ்வாறு சபிக்கப்பட்ட நகரத்திலிருந்து இரட்சிக்கப்பட்டார் விலைமாது இராகாபு மீட்கப்பட்டார். மீட்பை எதிர்நோக்கிய இராகாபு. கடவுளிடமிருந்து வந்த தெய்வீக ஆணையின் மீது நம்பிக்கை கொண்டதன் பயனாக இப்பெரும் பேறுபெற்றார் இராகாபு.

விலைமகளாய் இருந்த காரணத்தால், சமூகப் புறக்கணிப்புச் சூழலில் வாழ்ந்து வந்த இராகாபிடம், **கடவுள் பாவிகளின் நண்பர் என்ற ஓர் ஆழமான விசுவாசம் இருந்தது.** இதன் காரணமாக கடவுளிடமிருந்து ஒரு **தனித்துவமான அழைப்பைப்** பெற்றார். கடவுளிடமிருந்து வந்த **உள்ளுணர்வை உணர்ந்துகொள்ளும் ஞானமும்** பெற்றார்.

**(யாக்கோபு 2:24) மனிதர் நம்பிக்கையினால் மட்டுமல்ல செயல்களினாலும் கூட கடவுளுக்கு ஏற்புடையவராகின்றனர் எனத் தெரிகிறது.** என்று யாக்கோபு கூறுவதுபோல. விசுவாசம், நம்பிக்கை, இவைமட்டுமல்ல, செயலும் இராகாபிடம் இருந்தது. ஒற்றர்கள் கடவுளைச் சேர்ந்தவர்கள் என்றறிந்தவுடன் உதவ முன்வருகிறார் இராகாபு. திறமையான திட்டம் தீட்டுகிறார். பாலினத்திற்கான பொதுவான மொழி என்னைப் பார்க்க வந்தார்கள் என்பது, இம்மொழிகளையே சாதுரியமாக பயன்படுத்திக் காப்பாற்றுகிறார் ஒற்றர்களை. அழைப்பை ஏற்றவுடன் தன் சொந்த தேசத்தையே தியாகம் செய்கிறார். இனி முதல் பாவம் செய்வதில்லை எனத் தீர்மானிக்கிறார். (யாக் 2:25) இவ்வாறு **கடவுளுக்கு ஏற்ற செயல்களை இராகாபு செய்ததால் கடவுளுக்கு ஏற்புடையவரானார்.**

இஸ்ரயேல் சமுதாயத்தில் பெண்கள் எப்போதும் ஆண்களின் பாதுகாப்பில்தான் இருப்பார்கள். இங்கு (ஒற்றர்கள்) ஆண்கள் (இராகாபின்) ஒருபெண்ணின் பாதுகாப்பில் இருப்பதைக் காண்கிறோம்.

(மத் 21:31,32) **வரிதண்டுவோரும், விலைமகளிரும் உங்களுக்கு முன்பாகவே இறையாட்சிக்கு உட்படுவர், என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்.** என்ற இயேசுவின் இவ்வாக்கியத்தை இங்கு நாம் நினைவு

தொடர்ச்சி 7-ஆம் பக்கம்

# தொழுகைக் கூடம் எப்படி இருக்கும்?



அருள்திரு. L. ஆரோக்கியதாஸ்,
உதவி பங்குத்தந்தை, பேராலயம், புதுவை.

தொடர்ச்சி...

**மறைநூல் அறிஞர்களை பற்றி அறிவோம்!**

இஸ்ராயேல் மக்களுக்கு மிக மிக முக்கியமானவை இரண்டு அவை. 1.எருசலேம் ஆலயம் 2. சட்டங்கள் (தோரா). அவர்கள் கி.மு 722 – ல் அசீரிய மன்னன் சாரகோனால் அசீரியாவுக்கு நாடுகடத்தப்பட்டனர். அவ்வாறு அவர்கள் அடிமைகளாக நாடுகடத்தப்பட்டபோது அவர்களால் எருசலேம் ஆலயத்திற்கு செல்லவோ, வழிபடவோ, பலிசெலுத்தவோ இயலவில்லை. அப்போது அவர்களுக்கு இருந்த ஒரே ஒரு வாய்ப்பு சட்டங்கள் மட்டுமே. எனவே அவர்கள் மோசேயால் கொடுக்கப்பட்ட சட்டங்களை இன்னும் அதிக பற்றுதலோடு கடைபிடிக்கத் தொடங்கினர். அச்சமயத்தில் சட்டங்களை இளைய தலை முறைக்கு கற்றுக்கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதன் காரணமாக சட்டங்களை கற்றுத்தேர்ந்த சட்ட ஆசிரியர் கள், சட்ட வல்லுநர்கள் உருவாகினர். அவர்கள் மற்றவர் களுக்கு சட்டத்தை கற்பித்து அவற்றுக்குரிய விளக்கங் களையும் கொடுத்தனர். அவர்கள் ‘ரபி’ அல்லது ‘ரபூனி’ என்று அழைக்கப்பட்டனர். அவர்களுக்கு ‘கற்பித்தல் கூடங் களும்’ (Hous of instruction) மற்றும் சீடர்களும் (discibles) இருந்தனர். இவர்கள் தொடக்கத்தில் ஒரு சில சட்டக்கோப்பு கள் மற்றும் ஆவணங்களை எழுதுபவர்களாக இருந்தனர். பின்னர் அவர்கள் சட்ட நூல்களை நகல்களாக எழுதினர்.

அந்த சட்ட அறிஞர்கள் ஒரு சட்டத்தை எடுத்துக் கொண்டு அதனை பல வகைகளிலும் விளக்கினர். மேலும் அச்சட்டத்தை எவ்வாறு அன்றாட வாழ்க்கை நிகழ்வுகளில் கடைபிடிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினர். உதாரணத்திற்கு: “ஏழாம் நாள் ஆண்டவரின் ஓய்வு நாள் அன்று நீ ஒய்ந்திருக்க வேண்டும்” (இணை 5:14) என்பது கட்டளை. ஆனால் ஓய்வுநாளை அனுசரிப்பது குறித்து சட்ட அறிஞர்கள் ஏராளமான விளக்கங்களை கொடுத்தனர். அந்த விளக்கங்கள் ‘மிஷ்னா’ (mishna) என்று அழைக்கப்பட்டது. அவற்றில் சில இங்கே:

- ஓய்வு நாளில் பெண்கள் தலையில் முக்காடு அணிந்து செல்லுதல் கூடாது.
- ஓய்வு நாளில் நெற்றியில் வாசக பட்டைகளோ அல்லது காதுகளில் கனமான காதணிகளோ அணிதல் கூடாது. லேசான காதணிகளை அணியலாம்.
- இறுக்காமான பொன் அணிகலன்கள் அணிதல் கூடாது.
- காதில்லா ஊசியை எடுத்துச்செல்லுதல் கூடாது.
- தலைமுண்டாசு போன்ற ஆடைகளை அணிதல் கூடாது, ஏனெனில் அது தலையில் சுமையைச் சுமந்து செல்வதாகக் கருதப்படும்.
- கையில் வாசனைதிரவிய குப்பியை எடுத்துச் செல்லுதல் கூடாது.
- ஓய்வு நாளில் பெண்கள் தங்கள் தலையை வாரிக்கட்டிக் கொள்ளலாம். அது சுமையாக கருதப்படாது.

இதிலிருந்து அவர்கள் சட்டங்களை மிக நுணுக்கமாக கடைபிடித்தார்கள் என்பது தெளிவாகிறது. இருப்பினும் ‘legalism’ என்று சொல்லப்படுகின்ற ‘சட்டகடைபிடித்தன்மை’ என்கிற ஆபத்தை உருவாக்கினார்கள். சட்டங்கள் மட்டுமே ஒரு மனிதனுக்கு வாழ்வை கொடுக்கும் என்று கண்மூடித்தனமாக நம்பினார்கள்.

**இயேசுவின் வாழ்வில் மறைநூல் அறிஞர்கள்:**

1. இயேசு மறைநூல் அறிஞர்களின் அதிகாரத்தை ஏற்றுக்கொள்கிறார், இயேசுவே கூறுகிறார் “அவர்கள் மோசேயின் அதிகாரத்தை கொண்டுள்ளனர்” (மத் 23:2).

2. ஒருவர் இயேசுவின் சீடராக விரும்புகிறார் (மத் 8:19).

3. உயிர்த்தெழுதல் பற்றிய வாதத்தில் சதுசேயர்களை இயேசு தோற்கடித்ததை ஒரு மறைநூல் அறிஞர் பாராட்டுகிறார் (லூக் 20:38).

4. முதன்மையான கட்டளை எது? என்ற கேள்விக்கு சிறப்பாக பதிலளித்த மறைநூல் அறிஞரை இயேசு வெகுவாக பாராட்டுகிறார் (லூக் 10:28).

இப்படி பல இடங்களில் இயேசு அவர்களை பாராட்டி னாலும், அவர்கள் வெளிவேடத்தோடு இருக்கிறபோதும், மக்கள் மீது சுமக்க முடியா சுமைகளை சுமத்தி அவர்களுக்கு இடையூறாக இருக்கிறபோதும் அவர்களை கண்டிக்கிறார் (லூக் 11:52).

நல்லது செய்தால் பாராட்டுதலும், தீயது செய்தாலும் கண்டித்து திருத்துதலும் பொருத்தமானவையே!.

நண்பன் என்பதால் அனைத்தையும் ஏற்றுகொள்ளும் பகைவன் என்பதால் அனைத்தையும்.

ஏற்றுக்கொள்ளாமையும் தவறன்றோ!

---

6-ஆம் பக்கத் தொடர்ச்சி

கூர்வோம். **ஏனெனில் யோவான் நீதிநெறியைக் காட்ட உங்களிடம் வந்தார். நீங்களோ அவரை நம்பவில்லை. மாறாக, வரிதண்டுவோரும், விலைமகளிரும் அவரை நம்பினர்.**

விலைமாது இவ்வாறு விவிலியக் கதாபாத்திரமாகி இயேசுவின் மூதாதையர் பட்டியலில் இடம் பெறுகிறார்.

சமுத்திரத்தில் சங்கமமாவதையே இலக்காகக் கொண்டநதி,

புழுதி என்றும் பாராது தகுதி என்றும் பாராது,

சகதி என்றும் பாராது, அகதி என்றும் பாராது,

தன்னை வரவேற்கும் பாதைகளில் எல்லாம் உறுதியுடன் உருண்டோடிச் சென்று,

சல்லிவேரின் சருமம் முழுவதையும் நனைத்துக்கொண்டு,

இறுதியில் சந்தோஷமாய் சமுத்திரத்தில் சங்கமமாகிறது.

அதைப்போல,

இறைவனில் சங்கமமாவதையே இலக்காகக் கொண்ட இராகாபு,

தேசம் என்றும் பாராது, தேகம் என்றும் பாராது,

காயம் என்றும் பாராது, சாயம் என்றும் பாராது,

தேடி வந்த நல்லவர்களுக்கு உறுதியுடன் உதவிகள் செய்து,

துணிந்து செயல்பட்டதால் இஸ்ரயேல் என்னும்

சமுத்திரத்தில் சங்கமமாகி மகிழ்ந்தார்.

## மனமாற்றம் தேவை...!



– G. **போனிஃபாஸ் ஜூலியன்**, புதுவை-9.

ஒரு குடும்பம் சிறப்பாக இருக்க வேண்டுமென்று சொன்னால், கணவனும், மனைவியும் ஒருங்கிணைந்து குடும்ப முன்னேற்றத்திற்காக உழைக்க வேண்டும். குடும்பத்தை இரட்டை மாட்டு வண்டிக்கு ஒப்பிடுவர். இருவரும் ஒருமித்த கருத்துகளை கொண்டிருக்க வேண்டும். கருத்து வேறுபட்டால் குடும்பத்தில் பிரச்சனைகள் ஏற்படும். இன்றைய சமுதாயத்தில் பல குடும்பங்கள் சீரழிவதற்கு பல காரணங்கள் கூறலாம். உதாரணத்திற்கு குடிபழக்கம், சூதாட்டம், கூடா ஒழுக்கம், ஆடம்பர வாழ்க்கை என்று அடுக்கிக் கொண்டே போகலாம். இதில் முக்கியமாக குடும்பத்தை சீரழிப்பது குடிப்பழக்கம். குடும்பத் தலைவன் ஒருவனால், குடிப்பழக்கம் இருந்தால், அந்தக் குடும்பம் தலைநிமிர்ந்து நிற்க முடியாது. அவன் ஒருவன் சில மணி நேர சந்தோஷத்திற்காக குடும்பத்தையே பாழாக்குகிறான். தான் குடிப்பது மட்டுமல்ல நண்பர்களோடு சேர்ந்து அனைவரும் குடித்துவிட்டு தங்கள் உடல் நலத்தில் பாதிப்பு ஏற்படுத்தி கொள்கிறார்கள். இப்படித்தான் ஒரு குடும்பத் தலைவன். தினமும் குடித்துவிட்டு வீட்டிற்கு வந்து மனைவியை அடித்துக் கொண்டிருந்தான். அவள் எவ்வளவு சொல்லியும் திருந்த வில்லை. அவன் கூறும் காரணம் வெளி நாட்டில் உள்ளவர்கள் மது குடிக்கிறார்களே நாம் ஏன் மது அருந்தக்கூடாது. நம்முடைய சீதோஷ்ண நிலை வேறு, அவர்களுடைய சீதோஷ்ண நிலை வேறு. அது மட்டுமல்ல, அவர்கள் மது குடித்துவிட்டு அதற்கு உண்டான சத்துள்ள உணவை சாப்பிடுகிறார்கள். இங்கே நம்மவரோ நன்கு குடித்து விட்டு, பத்து பைசா வேர் கடலை சாப்பிட்டு விட்டு வீட்டுக்கு வந்து படுத்து விடுகிறார்கள். மதுவுக்கு தகுந்த போதிய சத்து உணவு தரப்படுவதில்லை. கடைசியிலே குடல் வெந்து இறுதி யாத்திரைக்கு தள்ளப்படுகிறார்கள். மேலே குறிப்பிட்ட அந்தக் குடும்பத் தலைவன் இப்படித்தான் தினமும் செய்வான். இவனுடைய அடி உதையை வாங்கிக் கொண்ட அந்த மனைவி ஒரு நாள் கூட கண்ணீர் விடவில்லை அழவில்லை. குறிப்பிட்ட ஒரு நாளில் அவன் மனைவியை அடித்துக் கொண்டிருந்தபோது அவள் ஓ... என்று கதறி அழுதாள். கணவனுக்கு ஒன்றும் புரியவில்லை. அவன் மனைவியை பார்த்து இவ்வளவு நாட்களாக உன்னை அடிக்கும்போது நீ அழவில்லை, ஆனால் இன்று மட்டும் அழுகிறாயே என்ன காரணம் என்று கேட்டான். அதற்கு அவள் கூறிய பதில், குடிகார கணவனை மனமாற்றம் அடையச் செய்தது. இதுவரையிலும் நீங்கள் அடிக்கும்போது, அடி பலமாக விழுந்தது. ஆனால் இன்றோ தலையணையால் தட்டுவது போல் இருந்தது. வலுவிழந்து விட்டது. நீங்கள் இறுதிப் பயணத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறீர்கள் என்று தெரிகிறது என்று கூறினாள். கணவன் தன் தவறை உணர்ந்தான். மனைவியிடம் மன்னிப்பு கேட்டுக்கொண்டான். இனி என் விருப்பத்திற்காக ஒருபோதும் இவ்விதமான தவறை செய்யமாட்டேன் என்று வாக்குறுதி அளித்தான். இருண்ட வீடு ஒளி வீச ஆரம்பித்துவிட்டது. சமூகத்தில் சாதாரணமாக நான்கு பேரை திருத்துவது கடினம். 1) குடிகாரன், 2) காதலிப்பவன், 3) போதை பொருள் உட்கொள்பவன், 4) சேமிப்பு இல்லாமல் ஆடம்பரமாக வாழ்பவன். இவையனைத்தும் கடினமாக இருந்தாலும், கடவுளால் ஆகாதது ஒன்றுமில்லை. இவர்களை சந்திக்க நேர்ந்தால் நல்ல அறிவுரைகளை கூறுவோம். அவர்களுக்காக இறைவனிடம் வேண்டுவோம். நம் தேவைகளுக்காக கடவுளிடம் வேண்டிக் கொள்வதைவிட மற்றவருக்காக வேண்டுவது சிறந்த ஜெபம் ஆகும். இதற்கு புனித பிரான்சிஸ் அசிசியார் ஒரு நல்ல எடுத்துக்காட்டு.

149 **இளம் உள்ளங்களுக்கு**

## உண்மை பலம்



– **B.**மேரி ராபர்ட் சாந்திதாஸ், புதுவை–1.

**எளிது - அரிது:** வாழ்வில் எந்த ஒன்றையும் தவறாகவோ, அபத்தமாகவோ பயன்படுத்துவதும், கொல்லுவதும், அழித்தொழிப்பதும் மிக எளிது. ஆனால் எந்த ஒன்றையும், எந்த சூழ்நிலையிலும் சரியாகவும், நல்ல நெறியில் அவற்றை வளர்ப்பதும், காப்பதும் அரிது.

**அங்குலிமால்:** ஒரு முறை சாந்தமே வடிவமான கௌதம புத்தர் ஓர் அடர்ந்த காட்டின் வழியே செல்ல நேரிட்டது. அந்த காடு யாரையும் கதிகலங்க வைக்கும் அங்குலிமால் என்ற கொடியவன் வாழும் இடம். அவன் யாரையும் கண்டமாத்திரத்தில் ஈவு இரக்கமின்றி கொன்று அவர்களின் விரல்களை வெட்டி எடுத்து கழுத்தில் மாலையாக அணிந்து பயங்கரமாகக் காட்சியளித்தான். அவனை காண்பவர் எவரும் அச்சத்தில் உறைந்திடுவர். அதனால் எவரும் அந்த காட்டின் வழியே செல்வதில்லை.

**நேருக்கு நேர்:** யாரும் செல்லத் துணியாத அந்த காட்டின் வழியே புத்தர் எந்த பதற்றமும் இன்றி வருவதை கண்டதும் அங்குலிமால் திகைப்புற்றான். ஏனெனில் புத்தர் அமைதியாகவும் அச்சமற்றவராகவும், சாந்தமுள்ளவராகவும் எந்த சலனம் இன்றியும் தோற்றமளித்தார். புத்தரை அச்சுறுத்தும் வகையில் திடீரென்று அவர்முன் அங்குலிமால் தோன்றினான். ஆனாலும் புத்தர் அதிர்ச்சியுறவில்லை; அமைதியாகவே காணப்பட்டார். இப்போது, அங்குலிமால் அதிர்ச்சியுற்றான். "என் பெயர் அங்குலிமால். என்னை கண்டு நீ அஞ்சவில்லையா?" அங்குலிமால் புத்தரை வினவினான். புத்தர் அமைதியாக, "உன்னைக்கண்டு நான் ஏன் நடுங்க வேண்டும்? நீ இங்கே என்ன செய்கிறாய்?" என்றார். அதற்கு அங்குலிமால், "இந்த காட்டின் வழியாக யார் வந்தாலும் அவர்களை கொல்லுவேன். என் பலம் என்னவென்று உனக்கு தெரியாது" என்றான். உடனே புத்தர், "நீ மகா பலசாலித்தான். எங்கே இந்த மரக்கிளையை முறித்துகாட்டு பார்க்கலாம்" என்றார். உடனே அங்குலிமால் அதை இரண்டாக முறித்துவிட்டு ஆணவத்துடன் சிரித்தான். மீண்டும் புத்தர் அமைதியாக அவனிடம், "இப்போது இந்த இரண்டையும் சேர்த்து முன்பு போல உயிருள்ளதாக்கு பார்க்கலாம்" என்றார். அதற்கு அங்குலிமால் மறுமொழியாக, "அது எப்படி முடியும்? நான் அதைபற்றி நினைக்கவே இல்லையே" என்று குழப்பத்துடன் குளறினான். உடனே புத்தர் புன்னகைத்தபடி, "அங்குலிமால் உன்னுடைய பலத்தில் என்ன இருக்கிறது. உன்னால் அழிக்கவும்,கொல்லவும்தான் முடியும். ஆனால் உயிரளிக்க முடியவில்லையே" என்றார். அங்குலிமால் புரிந்துகொண்டான். தன் செயலுக்காக வெட்கித்து போனான். மனமாற்றம் அடைந்தான். புத்தர் காலில் விழுந்து சரணடைந்தான்.

**சிந்திக்க:** ஒழுக்கம் சார்ந்தவை மாறாத மதிப்புடையவை. உடல் பலம், செல்வம், செல்வாக்கு, ஆளுமை எல்லாமே நிலையற்றவையே. நிரந்தர மகிழ்ச்சி அளிப்பவை அல்ல. நிலைவாழ்வு பெற, ஒழுக்க நெறியில் நின்று, இறைவார்த்தையை வாழ்வாக்கி வளம் பெறுவோம்.

## விண்ணக வாழ்வின் 5-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 25-09-1927



மறைவு: 05-11-2014

**Rev.Fr.S.கிறிஸ்தோபர்**

*"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - யோவான்.11:25*

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 5-11-2019 செவ்வாய் காலை 6.00 மணிக்கு திண்டிவனம், புனித வியாகுல அன்னை ஆலயத்திலும், காலை 6.15 மணிக்கு புதுவை புனித ஜென்ம ராக்கினி அன்னை பேராலயத்திலும் திருப்பலி நிறைவேற்றப் படும். இதை கண்ணுறும் அனைவரும் இக்குரு வின் ஆன்ம சாந்திக்காக ஜெபிக்க வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்
**M.Durairaj & Family.**

## விண்ணக வாழ்வின் 30-ஆம் நாள் நினைவு அஞ்சலி

மண்ணில்: 07-11-1922



விண்ணில்: 05-10-2019

**கித்தேரி அம்மாள்**

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே! என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" – யோவான் 11:25

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 9-11-2019 சனிக்கிழமை நண்பகல் 11.30 மணிக்கு வில்லியனூர், புனித லூர்து அன்னை திருத்தலத்தில் திருப்பலி நிறைவேற்றப்படும்.

பிரிவால் வாடும்
**மகள், மகன்கள், மருமகள்கள், பேரன்கள், பேத்திகள், கொள்ளுப்பேரன்கள் மற்றும் உறவினர்கள்.**

## விண்ணக வாழ்வின் 46-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 10-01-1905



மறைவு: 07-11-1973

**தமியன் லூர்துசாமி**
**தமியன் ஆரோக்கியமரி**

*"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - யோவான்.11:25*

இவர்களின் ஆன்மா சாந்தியடைய 7-11-2019 வியாழக்கிழமை காலை 6.00 மணிக்கு முருங்கப்பாக்கம் பங்கு, புனித சவேரியார் ஆலயத்தில் நிறைவேற்றப்படும் திருப்பலியில் பங்குகொண்டு இறைவனை வேண்டிக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

பிரிவால் துயருறும்
**மகள், மருமகள், மருமகன்கள், மற்றும் பேரப்பிள்ளைகள்.**
முருங்கப்பாக்கம்.

## விண்ணக வாழ்வின் இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி



அருள்திரு.Dr.A. **மரியசெல்வம்**

**மண்ணில் :** 12-12-1936
**குருப்பட்டம் :** 14-04-1964
**விண்ணில் :** 06-11-2017

**"உலகெங்கும் போய்ப் படைப்பிற்கெல்லாம் நற்செய்தியினை அறிவியுங்கள்" – மாற்கு.16:5**

ஆண்டவரின் கட்டளையை அப்படியே ஏற்று
உலகம் எங்கும் இறைவார்த்தையை அறிவித்த
உன்னத குருவாய், நல் ஆசிரியராய், ஒரு
தந்தையாய், நண்பராய், இறைவார்த்தையை
ஆழமாய் விளக்கி, இன்னும் ஆழமாய்
உங்களுக்குச் சொல்வேன் என்று கூறிய
இறைவார்த்தை வித்தகரே, உமது பணியை
பாதியில் நிறுத்தி **06–11–2017** அன்று
எங்களையெல்லாம் மீளாத் துயரத்தில்
ஆழ்த்திவிட்டு சென்று விட்டீரே.

அருட்தந்தையின் ஆன்ம இளைப் பாற்றிக்காக 6-11-2019 புதன்கிழமை அன்று புதுவை புனித ஜென்மராக்கினி அன்னை ஆலயத்தில் காலை 6.15 மணிக்கு திருப்பலி நிறைவேற்றப்படும்.

பிரிவால் துயருறும்
**சகோதர, சகோதரிகள்**
**உற்றார், உறவினர்கள்.**

# விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 10-07-1921



மறைவு: 07-11-2018

*"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - யோவான்.11:25*

அன்பு அன்னையே! எங்கள் தெய்வமே!
ஓராண்டு முடிந்தாலும் ஓயாமல் உங்கள் நினைவுதான்
கண்ணயர்ந்து சோர்ந்தாலும் கனவிலும் நீங்கள்தான்
அடியெடுத்து நடந்தாலும் அடிதோறும் உங்கள் சுவடுதான்
செவிமடுத்துக் கேட்டாலும் என்றும் உங்கள் அறிவுரைதான்
எங்களையெல்லாம் கரம்பிடித்து வழிநடத்திய அன்னையே
எங்கள் வீட்டின் ஒளி தீபமே!
மண்ணில் நீர் மறைந்தாலும்
விண்ணில் என்றும் நீர் ஒளிர
மண்டியிட்டு மன்றாடி ஆண்டவனை வேண்டுகிறோம்
நித்திய இளைப்பாற்றியை நித்தமும் தந்திட
தந்தையாம் இறைவனிடம் தயையுடன் வேண்டுகிறோம்.

**என்றும் உம் நினைவில்**
**மகன்கள் - மருமகள்கள், மகள்கள்**
**பேரப்பிள்ளைகள், கொள்ளுப்பேரப்பிள்ளைகள்.**

## 07-11-2019: நினைவுத் திருப்பலி

**புதுவை, திரு இருதய ஆண்டவர் பசிலிக்காவில், வியாழக்கிழமை மதியம் 12.00 மணி; அரியாங்குப்பம், புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் காலை 6.00 மணி; தாகூர் நகர், தூய ஆவியானவர் ஆலயத்தில் மாலை 6.00 மணிக்கும் திருப்பலி நிறைவேற்றப்படும்.**

## திருமதி. பெலிசித்தே தெலாமூர்

W/o. திரு. சௌந்தரராஜ்

---

**விண்ணக வாழ்வின்**
**4-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி**

பிறப்பு: 17-10-1932



இறப்பு: 11-11-2015

## திரு. A. மைக்கேல்துரை

(Rtd. EID PARRY, Nellikuppam)

***"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் எவரும் இறப்பினும் வாழ்வார்" யோவான் 11:25***

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 11–11–2019 திங்கள் காலை 6.00 மணிக்கு ரெட்டியார்பாளையம், புனித அந்திரேயா ஆலயத்திலும், நெல்லித்தோப்பு, புனித விண்ணேற்பு அன்னை ஆலயத்திலும், நெல்லிக்குப்பம் புனித சூசையப்பர் ஆலயத் திலும் திருப்பலிகள் நிறைவேற்றப்படும்.

**பிரிவால் துயருறும்**
**மனைவி, தம்பி, பிள்ளைகள், மகள்கள், மருமகன்கள், மருமகள்கள், பேரப்பிள்ளைகள்.**
ரெட்டியார்பாளையம்.

---

18th DEATH ANNIVERSARY

Birth : 06-09-1937



Death : 07-11-2001

## Mrs. CARMEN CECILIA AGARWALA

**A SUDDEN PARTING**

Holy Mass will be offered on 03-11-2019 at 8.00 a.m. at Christ the King Church, Villupuram.

***Please pray that her Soul may rest in the Lord.***

**Ms. Judy Marie,**
Fr. Francis Joseph Agarwala
**Mrs.Mr. Antony Martin**
**Relatives and Friends.**

---

**விண்ணக வாழ்வின்**
**2-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி**

தோற்றம்: 12-12-1936



மறைவு: 06-11-2017

## அருட்பணி A. மரிய செல்வம்

*"உலகெங்கும்போய் படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை பறைசாற்றுங்கள்." (மாற்கு.16:5)*

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 06-11-2019 காலை 6.00 மணிக்கு புதுவை நெல்லித்தோப்பு, புனித விண்ணேற்பு அன்னை ஆலயத்திலும், திரு இருதய ஆண்டவர் பசிலிக்காவிலும் நிறை வேற்றப்படும் திருப்பலியில் கலந்து கொண்டு அருட்தந்தையின் ஆன்ம சாந்திக்காக செபிக்க வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்
அமல், லூர்து
நெல்லித்தோப்பு

# விண்ணக வாழ்வின் 25-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி











**தோற்றம்**
**29-05-1929**

**மறைவு**
**10-11-1994**

# Mme. MARIE JOSEPHINE

**"ஆண்டவரின் கையில் நீ அழகிய மணிமுடியாகத் திகழ்வாய்" - (எசா.62:3)**

**இறைவா! இவ்வுலகிலிருந்து உம்மிடம் அழைக்கப்பட்ட**
**உமது அடியார்**

## திருமதி. மரி ஜோஸ்பின்

**அவர்களின் ஆன்மாவை நித்திய வாழ்வில் சேர்த்து**
**முடிவில்லா ஒளியில் என்றும் உம்மோடு இருக்கும்படி**
**செய்தருளும் ஆமென்.**

- ஒரு கர்.மங்.திரி.

பிரிவால் துயருறும்
**மகன்கள் - மருமகள்கள்**
**மகள்கள் - மருமகன்கள்**
**பேரப்பிள்ளைகள்**
**மற்றும் உற்றார், உறவினர்கள்.**

**இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 10-11-2019 அன்று காலை 6.30 மணிக்கு வில்லியனூர், புனித லூர்து அன்னை திருத்தலத்திலும், காலை 6.00 மணிக்கு அரியாங்குப்பம், புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் மரித்தோர் பாடல் திருப்பலி நிறைவேற்றப்படும்.**

## கடவுளின் திட்டத்தில் தாவர உலகின் பயன்பாடு ௫

அருட்திரு.V.S. **தோமினிக் சாவியோ,** பங்குதந்தை, பாத்திமாபாளையம்.

'பாதுகாக்கவும்' என்ற சொல்லுக்கு "சாமர்" (ŏâmar) என்னும் எபிரேயச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த சொல்லினுடைய உள்ளார்ந்த பொருள் 'சிறப்பான பாதுகாப்பை நல்கு' என்பதே. அதாவது'காவல் காத்திருத்தல்' என்ற பொருளை உள்ளடக்கியது (தொநூ:4:9; 30:31). எனவே, கடவுளின் அழகிய தோட்டமாகிய இந்த பூமியும் அதில் உள்ள அனைத்து தாவர இனங்களும் மனிதனால் பாதுகாக்கப்படவேண்டியவை என்ற கட்டளையை இந்த சொல் கொடுக்கின்றது. மனிதன் மற்றும் விலங்குகள் முதலான மற்ற உயிரினங்கள் உயிருக்கு ஒரு ஆபத்து வருகின்ற நேரத்தில் ஓடுகின்றன அல்லது எதிர்த்து தாக்கி உயிரைக் காத்துக்கொள்கின்றன. ஆனால் தாவர இனங்கள் அப்படி செய்ய இயலாதவை. எனவே ஒரு நல்ல காவலாளியாக, மனிதன் தான் அவற்றிற்கான பாதுகாப்பை நல்க வேண்டும் என்கின்ற கடவுளின் திட்டத்தையே இந்தக் கட்டளைச் சொற்கள் வெளிப்படுத்துகின்றன. எனவே பண்படுத்தி பாதுகாத்தல் என்ற கட்டளை மனிதனுக்கு கடவுள் தன் படைத்து பராமரிக்கும் பணியில் பங்கு தருவதைக் காட்டுகின்றதே அன்றி, மனிதனை ஒரு அடிமை வேலை செய்பவனாகக் காட்டவில்லை. அடிமைக்கு தன் தலைவன் கொடுக்கும் கட்டளையை அப்படியே நிறைவேற்றும் அதிகாரம் மட்டுமே உண்டு. ஆனால் தானாகச் சிந்தித்து காலத்துக்கேற்ப செய்யவேண்டியதைச் செய்யும் அதிகாரம் இல்லை. மனிதனுக்கு கடவுள் இந்த பூமியின் உயிரினங்களைப் பாதுகாப்பதில் தானாக சிந்தித்து காலத்துக்கேற்ப செயல்படும் உரிமையையும் கடமையையும் அளித்துள்ளார். அதாவது, இந்த புவியில் வாழும் தாவர இனங்கள் முதலான அனைத்து உயிரினங்கள் மீதும் அதிகாரம் அளித்துள்ளார். இந்த அதிகாரத்தை மனிதன் தன் சுயநலத்துக்காக மட்டுமே பயன்படுத்தும் போது காடுகள் அழிக்கப்படுகின்றன, உயிரினங்கள் தங்க இடமின்றி, உணவின்றி, தண்ணீரின்றி அழியும் அவல நிலை ஏற்படுகின்றது. கடவுள் மனிதனுக்கு வழங்கியுள்ள அதிகாரம் பாதுகாப்பதற்கே அழிப்பதற்கு அல்ல, என்பதே விவிலியத்தின் ஆழமாக கோட்பாடு.

தாவர உலகின் மீதான மனிதனின் கடமைகள் உண்மையில் சிறப்பு வாய்ந்தவை. வசதியான பல அடுக்கு மாடி வீடுகள், தொழிற்சாலைகள், சாலை விரிவாக்கங்கள் போன்ற பல்வேறு மனிதனின் தனிப்பட்ட தேவைகளுக்காக காடுகளை அழிப்பதை மனிதன் நிறுத்தாவிட்டால், இப்புவியில் மனித இனத்தின் அழிவை யாராலும் தடுக்க இயலாது. பசுமையை போர்வையென போர்த்தியுள்ள ஒரே கோளாகிய நம் பூமியை பாதுகாக்க தாவர இனங்களைப் பாதுகாத்தல் அவசியம்.

**செயல்முறைத் திட்டம் :** ➢ ஒவ்வொரு நாளும் 15 நிமிடங்களாவது நம்மைச் சூழ்ந்துள்ள மரங்கள், செடிகள் இவற்றை பராமரிக்க செலவிடுதல்.

➢ நம் வீட்டில் மரங்கள் தவிர்கமுடியாத காரணங்களால் வெட்டப்படும் போது இருமடங்காக மரங்களை நட்டு வளர்த்தல்.

➢ காடுகளை அழிப்பதற்கு எதிரான சட்டங்கள் இயற்ற வலியுறுத்துதல்.

➢ அரியவகை மரங்களைப் பாதுகாத்தல்.

# நம் பொதுவான இல்லத்தை போர்க்களம் அற்றதாக மாற்ற..

திருச்சி அருகே நடுக்காட்டுப்பட்டியில் ஆழ்துளை கிணற்றில் விழுந்த இரண்டு வயது நிரம்பிய சுஜித்தை மீட்கும் பணி, இரவு பகலாய், தொடர்ந்து 60 மணி நேரத்திற்கும் மேலாக நடந்து வந்தது. இறுதியில் சிறுவனை சடலமாக மீட்டனர். சிறுவனின் ஆன்மா சாந்திக்காக நாம் ஜெபிப்போம்.

வாழ்க்கை என்பது ஒரு போராட்டமே. போராட்டம் இல்லாமல், எதிலும் வெற்றி பெறுவது குதிரைக்கொம்பே. இந்திய முன்னாள் குடியரசுத் தலைவர், அப்துல்கலாம் அவர்கள் சொன்னார் - வாழ்க்கை என்பது, ஒரு சந்தர்ப்பம் அதை நழுவ விடாதீர்கள். வாழ்க்கை என்பது ஒரு கடமை, அதை நிறைவேற்றுங்கள். வாழ்க்கை என்பது ஓர் இலட்சியம். அதைச் சாதியுங்கள். வாழ்க்கை என்பது ஒரு சோகம், அதைத் தாங்கிக் கொள்ளுங்கள். வாழ்க்கை என்பது ஒரு போராட்டம், அதை வென்று காட்டுங்கள், வாழ்க்கை என்பது ஒரு பயணம், அதை நடத்தி முடியுங்கள் என்று. வாழ்க்கையே ஒரு போராட்டத்தில்தான் ஆரம்பிக்கிறது. இந்தப் போராட்டங்கள், தனி மனித வாழ்வில், சமுதாய, தேசிய வாழ்வில் என வேறுபடுகின்றன. இன்று ஏறத்தாழ எல்லா நிலைகளிலும் போராட்டமே வாழ்க்கையாக மாறிவிட்டது. பொதுவாக, சமுதாய, அரசியல், பொருளாதாரம் போன்ற நிலைகளில் எதிர்கொள்ளும் அநீதிகளையும், அடக்குமுறைகளையும் சகித்துக்கொள்ள முடியாத மக்கள், தங்களின் கோரிக்கைகளை, எதிர்ப்புப் போராட்டங்களாக வெளிப்படுத்துகின்றனர்.

### இந்தியாவில் போராட்டம்

காலமுறை ஊதிய உயர், பதவி உயர்வு வழங்குதல், நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மதுத்துவப் பணியிடங்களை உயர்த்துதல், மருத்துவ மேற்படிப்புகளில் இட ஒதுக்கீடு என்ற நான்கு அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி, தமிழகம் முழுவதும் 18,00 அரசு மருத்துவர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

அரசுகளின் முறையற்ற மேலாண்மையால், துன்புறுவோர் ஏழைகளே. துன்பத்திற்குமேல் துன்பத்தை அனுபவித்து தாங்க முடியாத நிலையில் இவர்கள் வீதிக்கு வந்து போராடுகிறார்கள். ஐ.நா. நிறுவன பொதுச் செயலர் அந்தோனியோ கூட்டேரெஸ் அவர்களும், அரசியல்வாதிகள் மீது மக்களின் நம்பிக்கை குறைவதாலே உலகெங்கும் போராட்டங்கள் வலுவடைகின்றன, குடிமக்களின் வளர்ந்துவரும் நம்பிக்கையின்மை பேரிடரை அரசியல் வாதிகள் அகற்ற வேண்டும் என, அக்டோப்ர 25, கடந்த வெள்ளியன்று அழைப்பு விடுத்தார். இந்த உலகம், போர்க்களமற்ற பூமியாக மாற, ஏழைகளின் அழுகுரல் கேட்கப்பட வேண்டும். நசுக்கப்படுவோர் வாழ்வு, உய்வு பெற வேண்டும். சுற்றுச்சூழல் காக்கப்பட வேண்டும். உலகின் நுரையீரலாகிய அமேசான் பருவமழைக்காடுகள் உட்பட அழைத்துக் காடுகளும் பராமரிக்கப்பட்டு, பூமி, பசுமை நிலமாக, அமைய வேண்டும். உலகம் சமநிலை பெற வேண்டும். உயர்வு தாழ்வில்லா நிலைவேண்டும், அறநெறியில் மனிதர் வளர்ந்திட வேண்டும். அனைவரும், குறிப்பாக, அரசியல்வாதிகள் நெஞ்சில் நேர்மை நிறைந்திட வேண்டும். அன்பு செழிக்க வேண்டும்.

**Published and Printed by** Very Rev. Msgr. A. Arulanandam **on behalf of Most Rev.** Dr. A. ANANDARAYAR, D.D.,D.C.L., Archbishop of Pondicherry & Cuddalore. Printed at Mission Press, 196, Cathedral Street, Puducherry - 605 001. Published from Mission Press, 196, Cathedral Street, Puducherry-605 001. Editor: Very Rev. Msgr. A. Arulanandam. Manager: Very Rev. Msgr. A. Arulanandam.